ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2082/7 - 2018 ජූලි මස 31 වැනි අඟහරුවාදා - 2018.07.31

*2082/7 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபை அரச சேவையின் அதிகாரங்கள் கையளிக்கப்படல் தொடர்பான ஆணை*

*1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின்படி மேல் மாகாணத்தின் ஆளுநராக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.26 ஆந் திகதிய 2046/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆணையின்படி மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு சபைக்கு அளித்த மேல் மாகாண சபை அரச சேவைகளுக்கு ஏற்புடைய நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியிலிருந்து நீக்குதல் அல்லது பணிநீக்கம், அவர்களின் ஒழுக்க கட்டுப்பாடு தொடர்பான அதிகாரங்களிடையே இதனோடு இணைக்கப்பட்டுள்ள இலக்கம் 01 முதல் 07 வரையான அட்டவணைகளில் ஒவ்வொரு அட்டவணையின் கீழும் காட்டப்பட்டுள்ள அளவுக்குரிய அதிகாரங்கள் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கேற்ப இங்கு மேற்குறிப்பிட்ட அட்டவணைகளில் III ஆம் நிரலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள, காட்டப்பட்டுள்ள நியமனம், இடமாற்றம், பணிநீக்கம் மற்றும் அவர்களின் நன்னடத்தை கட்டுப்பாடு தொடர்பான அதிகாரங்கள் அந்த அட்டவணைகளில் II ஆம் நிரலில் உறுதியாக காட்டப்பட்டுள்ள அதிகாரங்களும் இது தொடர்பில் அட்டவணைகளில் I ஆம் நிரலில் உறுதியாக காட்டப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படும்.*

*அவ்வாறானபோதும், மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இவ் அதிகாரக் கையளிப்பு தொடர்பில் அல்லது குறிப்பிட்ட அதிகாரங்களைச் செயற்படுத்தல் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் தோன்றும் சந்தர்ப்பத்தில், மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்வு இறுதித் தீர்வாகவும் தீர்மானம் மிக்கதாகவும் இருக்கவேண்டும். மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மாகாண பிரதம செயலாளர் அல்லது யாரேனும் ஒரு அதிகாரிக்கு இத்தால் கையளிக்கப்படும் அதிகாரங்கள் செயற்படுத்தும்போது அந்த அதிகாரியினால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளும் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) மற்றும் 32(2ஆ) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்ட ஆணைக்கு இத்தால் ஆணையிடுகிறது.*

1A - PG 4149 — 107 (2018/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறிப்பிட்ட அதிகாரங்கள் மேல் மாகாண சபையின் அரச சேவையிலுள்ள யாரேனும் ஒரு அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள போதும், அந்த அதிகாரிகளால் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் செயற்படுத்தப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவிற்கேற்ப மேல் மாகாண ஆளுநரால் தயாரிக்கப்பட்ட மேல் மாகாண அரச பதவிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவியுயர்வு தொடர்பான மேல் மாகாண அரச சேவைகள் செயற்பாட்டு நடைமுறை விதிக் கோவை போன்றே தாபனக் கோவை, மேல் மாகாண ஆளுநர் மற்றும் மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் ஏதேனும் நிபந்தனைகள், விதிகள், ஆணைகள் மற்றும் வேறு நடைமுறை ஒழுங்குகளுக்கு ஏற்ப செயற்படவேண்டும் என குறிப்பிட்ட ஆணைக்குழுவினால் இத்தால் உறுதியாக ஆணையிடப்படுகிறது.

மேலும் குறிப்பிட்டவாறு வழங்கப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்போது அதிருப்தியடையும் தரப்பிற்கு மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்வதற்கான உரிமை உள்ளது. மேலும் இலக்கம் 01 முதல் 07 வரையான அட்டவணைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 2064/32 மற்றும் 2018.03.26 ஆந் திகதியிலமைந்த அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் ஆணைகளுக்கேற்ப மேல் மாகாண ஆளுநரால் மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்ட ஏனைய அதிகாரங்கள் மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

2018.06.26 ஆந் திகதியன்றுள்ளவாறான மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு தீர்வின்படி இந்த அதிகாரங்களை கையளித்தல் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும், முன்னர் மேற்கொள்ளப்பட்ட அதிகாரக் கையளிப்பு, அதன் கீழ் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டுள்ளது என கருதப்படும் ஏதேனும் செயற்பாட்டுக்கு பங்கம் நேராதபடி செயற்படுத்துவதாக உறுதி செய்வதாகவும் மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் இத்தால் உறுதியாக ஆணையிடப்படுகிறது.

கே. சரத் குணதிலக்க,
தலைவர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மேல் மாகாணம்,
109, பிரதான வீதி,
பத்தரமுல்லை,
2018, யூன் 26.

**அட்டவணை 01**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. பிரதம செயலாளர் | (I) நாடளாவிய சேவைக்குரிய உத்தியோகத் தர்கள்<br>i. இலங்கை நிர்வாக சேவை<br>ii. இலங்கை எந்திரி சேவை<br>iii. இலங்கை விஞ்ஞான சேவை<br>iv. இலங்கை கட்டிட நிர்மாண சேவை<br>v. இலங்கை கணக்காளர் சேவை<br>vi. இலங்கை திட்டமிடல் சேவை<br>vii. இலங்கை கல்வி நிர்வாக சேவை<br>viii. இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவை<br>ix. இலங்கை வைத்திய சேவை<br>x. இலங்கை சுதேச வைத்திய சேவை<br>xi. இலங்கை அளவையாளர் சேவை<br>xii. இலங்கை விவசாய சேவை | (அ) மேல் மாகாணப் பொதுச்சேவைக்கு நியமனம்<br>(ஆ) மேல் மாகாணத்தில் அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனங் களுக்கு நிலைப்படுத்தல்<br>(இ) மேல் மாகாணத்தில் அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனங் களுக்கு இடையே இடமாற்றம் செய்தல்<br>(ஈ) மேல் மாகாண அரச சேவையிருந்து விடுவித்தல் |

**அட்டவணை 01** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள்* | *நிரல் II*<br>*உத்தியோகத்தர்களின் பிரிவு* | *நிரல் III*<br>*அளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| | (II) நாடளாவிய சேவைக்குரிய உத்தியோகத் தர்கள் (கல்வி நிர்வாக சேவை உத்தியோ கத்தர்கள் தவிர்ந்த) | (அ) ஒழுக்கக் கட்டுப்பாடு (அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குவிதி களுக்கு கீழமைந்த)* |
| | (III) மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு நியமன அதிகாரியாகவுள்ள:-<br>(i) SL சம்பளத்தொகுதியை உடைய உத்தியோகத்தர்கள் (உள்ளூராட்சி நிறுவனங்களோடு மட்டுப்படுத்தப்பட்ட SL சம்பளத் தொகுதியை உடைய உத்தியோகத் தர்கள் தவிர்ந்த) | (அ) அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/ நிறுவனங்களிடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (IV) மேல் மாகாண அரசசேவை ஆணைக்குழு நியமன அதிகாரியாகவுள்ள பொ.நி.சு. 06/2006 சுற்றறிக்கைக்கமைய மூன்றாம், இரண்டாம் நிலைக்குரிய உத்தியோகத் தர்கள் :-<br>(i) SL வகுப்பினைச் சாராத உத்தியோ கத்தர்கள் | (அ) பிரதம செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதம செயலாளர் அலுவலகத் துடன் இணைந்த நிறுவனங்களிடையே இடமாற்றம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு<br>(ஆ) அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/ நிறுவனங்களிடையே இடமாற்றம் செய்தல் |
| | (V) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய MT-1, MN-1மற்றும் PL வகுப்பினை சார்ந்த உத்தியோகத்தர்கள் | (அ) பிரதம செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதம செயலாளர் அலுவலகத் துடன் இணைந்த நிறுவனங்களிடையே பதவிகளுக்கு நியமித்தல், இடமாற்றம், பணிநீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு.<br>(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த அமைச்சுக்கள்/திணைக்களங்கள் இடையே இடமாற்றங்கள் மேற் கொள்ளல் |

* **குறிப்பு**.- "அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குகளின் கீழ்" என்பது அரச சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகளின் கீழ் செயற்படுதல் எனப் பொருளைக் கொண்டிருக்கும்.

**அட்டவணை 02**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. ஆளுநரின் செயலாளர்<br>2. மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர்<br>3. மாகாண சபை செயலாளர் | (I) மேல் மாகாண அரசசேவை ஆணைக் குழு நியமன அதிகாரியாகவுள்ள பொ.நி.சு. 06/2006 சுற்றறிக்கைக்கமைய மூன்றாம், இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் | (அ) சம்மந்தப்பட்ட அலுவலக உத்தியோகத் தர்களின் பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு. |
| | (II) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய MT-1, MN-1 மற்றும் PL ஆரம்ப வகுப் பினை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) நியமனம் மற்றும் பதவியுயர்வு செயற் பாடுகள்<br>(ஆ) உத்தியோகத்தர்களின் பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |

**அட்டவணை 03**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. அனைத்து அமைச்சுச் செயலாளர்கள் * | (I) மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு நியமன அதிகாரியாகவுள்ள பொ.நி.சு. 06/2006 சுற்றறிக்கைக்கமைய மூன்றாம், இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் | (அ) தமது அமைச்சு மற்றும் அமைச்சிற் குரிய திணைக்களங்களினது உத்தியோ கத்தர்களை தமது அமைச்சு மற்றும் அமைச்சினது திணைக்களங்களி டையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) தமது அமைச்சு உத்தியோகத்தர்களின் பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு (SL தொகுதி தவிர்ந்த)<br>**குறிப்பு** :-<br>சுகாதார மற்றும் ஆயுர்வேத திணைக் களங்களால் நியமிக்கப்பட்ட சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு தவிர்ந்த |
| | (II) பொ.நி.சு.06/ 2006 சுற்றறிக்கைக்கமைய MT-1, MN-1 ஆரம்ப வகுப்பினை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் திணைக்களங்களில் நியமனம், இடமாற்றம் மற்றும் பதவியுயர்வு செயற்பாடுகள்<br>(ஆ) உத்தியோகத்தர்களின் பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |

**அட்டவணை 03** *(தொடர்ச்சி)*

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. அனைத்து அமைச்சுச் செயலாளர்கள் * (தொடர்ச்சி) | (III) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய PL ஆரம்ப வகுப்பினை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) அமைச்சு மற்றும் திணைக்களங்களில் நியமனம், இடமாற்றம் மற்றும் பதவியுயர்வு செயற்பாடுகள்<br>(ஆ) பணிநீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு (சுகாதார, ஆயுர்வேத மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) |

***குறிப்பு**.- மேற்படி அதிகாரங்களுக்கு மேலதிகமாக, கீழேயுள்ள அட்டவணைகளும் அடங்கும் :-
கல்வி விடய அட்டவணை - 04
உள்ளூராட்சி விடய அட்டவணை - 05
சுகாதார விடய அட்டவணை - 07

**அட்டவணை 04**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர்<br>(மேலே அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுக்கு மேலதிகமாக) | (I) இலங்கை கல்வி நிர்வாக சேவை | (அ) அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் வலயங்களில் இடமாற்றம்<br>(ஆ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு (மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி) |
| | (II) இலங்கை அதிபர் சேவை | (அ) மாகாண பொதுச்சேவைக்கு நியமித்தல்<br>(ஆ) இடங்களுக்கு நிலைப்படுத்தல்<br>(இ) இடமாற்றம் செய்தல்<br>(ஈ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு<br>(உ) மாகாண அரசசேவையிலிருந்து விடுவித்தல் |
| 2. மாகாணக் கல்விப் பணிப்பாளர் | (I) மேல் மாகாண ஆசிரியர் சேவை | (அ) வலயங்களுக்கிடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |

**அட்டவணை 04** *(தொடர்ச்சி)*

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 2. மாகாணக் கல்விப் பணிப்பாளர் (தொடர்ச்சி) | (I) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய MN-1, PL ஆரம்ப வகுப்பினை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) வலயங்களுக்கிடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| 3. வலயக் கல்விப் பணிப்பாளர் | (I) மேல் மாகாண ஆசிரியர் சேவை | (அ) தரங்களுக்கு பதவி உயர்வும் சேவை ஓய்வும்<br>(ஆ) வலயத்துக்குள் இடமாற்றம் செய்தல் |
| | (II) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய PL ஆரம்ப வகுப்பினை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) வலயத்துக்குள் இடமாற்றம் செய்தல் |

**குறிப்பு**.-

"அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குகளின் கீழ்" என்பது அரச சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகளின் கீழ் செயற்படுதல் எனப் பொருளைக் கொண்டிருக்கும்.

**அட்டவணை 05**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்<br>(மேலே அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுக்கு மேலதிகமாக) | (I) மேல் மாகாண அரசசேவை ஆணைக்குழு நியமன அதிகாரியாகவுள்ள பொ.நி.சு. 06/2006 சுற்றறிக்கைக்கமைய SL வகுப்பு உயர்நிலை உத்தியோகத்தர்கள் | (அ) அமைச்சு, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (II) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய மேல் மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிசிறப்பு வகுப்பு உத்தியோகத்தர்கள் | (அ) பிரதேச சபைச் செயலாளர் பதவிக்கு நியமித்தல்<br>(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு நியமித்தல்<br>(இ) அமைச்சு, திணைக்கள மற்றும் நிறுவனங்களில் இடமாற்றம்<br>(ஈ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (III) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய MN-7 சம்பள நிலைக்குரிய மாகாண அரசசேவை ஆணைக்குழு நியமனம் செய்யும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள் (மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிசிறப்பு வகுப்பு உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) | (அ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |

**அட்டவணை 05** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள்* | *நிரல் II*<br>*உத்தியோகத்தர்களின் பிரிவு* | *நிரல் III*<br>*அளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| 2. மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் | (I) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய மூன்றாம், இரண்டாம் நிலைக்குரிய மாகாண அரசசேவை ஆணைக்குழு நியமனம் செய்யும் உத்தியோகத்தர்கள் (மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிசிறப்பு வகுப்பு உத்தியோகத் தர்கள் தவிர்த்து) | (அ) உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடை யான இடமாற்றம் |
| | (II) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய மூன்றாம், இரண்டாம் நிலைக்குரிய மாகாண அரச சேவை ஆணைக்குழு நியமனம் செய்யும் உத்தியோகத்தர்கள் (SL மற்றும் MN7 சேவை அதிசிறப்பு வகுப்பு உத்தியோகத்தர்கள் தவிர்த்து) | (அ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (III) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய PL வகுப்பு ஆரம்ப நிலைக்குரிய உத்தி யோகத்தர்கள் | (அ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (IV) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய உள்ளூராட்சி நிறுவனத் தலைவர் பிரதான நியமன அதிகாரியாக அமைந்துள்ள ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்கள் | (அ) விசேட ஏற்பாடுகள் இருக்கும்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவி வகிப் போரினதும் ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களின் இணக் கத்தின் அடிப்படையில் ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிடல் |
| 3. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் | (I) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய மூன்றாம், இரண்டாம் நிலைக்குரிய மாகாண அரசசேவை ஆணைக்குழு நியமனம் செய்யும் உத்தியோகத்தர்கள் (மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிசிறப்பு வகுப்பு உத்தியோகத் தர்கள் தவிர்த்து) | (அ) மாவட்டத்துக்கு உள்ளான உள்ளூராட்சி அமைப்புகளுக்கிடையேயும் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்கள் இடையிலுமான இடமாற்றங்கள் |

**அட்டவணை 06**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. மாநகரசபை ஆணையாளர்கள்<br>2. நகரசபை செயலாளர்கள்<br>3. பிரதேசசபை செயலாளர்கள் | (I) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய 06/2006 இற்கமைய மூன்றாம்/இரண்டாம், ஆரம்ப சம்பள நிலையான MT-3, RS-1, RS-2, RS-3, RS-4, RS-5, MN-1 மற்றும் PL உடைய உத்தியோகத்தர்கள் | (அ) பிரதான உள்ளூராட்சி நிறுவன தலைவர்களின் சிறப்பு ஒப்புதலுடன்-<br>(i) சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் நியமித்தலும் உள்ளூராட்சி எல்லைக்குள் இடமாற்றம் செய்தல் மற்றும் நியமனம், பதவி யுயர்வு என்பன<br>(ii) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |

**அட்டவணை 07**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்<br>(மேலே அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுக்கு மேலதிகமாக) | (I) மேல் மாகாண அரசசேவை ஆணைக்குழு நியமன அதிகாரியாகவுள்ள பொ.நி.சு. 06/2006 சுற்றறிக்கைக்கமைய மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள்:-<br>(i) MP சம்பள வகுப்பினை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) மாகாணத்துக்கு உள்ளான இடமாற்றங்கள்<br>(ஆ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| 2. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் } | (I) மேல் மாகாண அரசசேவை ஆணைக்குழு நியமன அதிகாரியாகவுள்ள பொ.நி.சு. 06/2006 சுற்றறிக்கைக்கமைய ஆரம்ப, இரண்டாம், மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள்<br>(MP சம்பள வகுப்பினை உடைய உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) | (அ) சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு உள்ளே இடமாற்றங்கள்<br>(ஆ) சுகாதார / ஆயுர்வேத திணைக்களங்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| 3. மாகாண ஆயுர்வேத ஆணையாளர் } | (II) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய PL சம்பள வகுப்பினை உடைய ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள் | (அ) சுகாதார திணைக்களத்தின் கீழ் மாவட்டங்களிடையான இடமாற்றம்<br>(ஆ) ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் மாகாண மட்ட இடமாற்றம்<br>(இ) பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| 4. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் | (I) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய PL சம்பள வகுப்பினை உடைய ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள் | (அ) மாவட்டத்திற்குள்ளான இடமாற்றம் |

08-507

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.